# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2016.12.05

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 17/2016**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஆளணியின் சம்பளத்தில் திருத்தம் மேற்கொள்ளல் - 2016**

30 (1) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அடிப்படையில் பல்கலைக்கழக ஆளணியின் சம்பள முரண்பாடுகளை சீர் செய்தல் சம்பந்தமான 2013.03.07 ஆம் திகதிய இலக்கம்: 03/2013, 2013.06.12 ஆம் திகதிய இலக்கம்: 03/2013 ( i) மற்றும் 2013.06.27 ஆம் திகதிய இலக்கம்: 03/2013 ( ii) கொண்ட ஆணைக் குழுச் சுற்றறிக்கைகள் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2016.08.23 ஆம் திகதிய HE/EST/02/UTUJC ஆம் இலக்க கடிதத்தின் ஊடாக முன்வைக்கப்பட்ட, பல்கலைக்கழக ஆணைக் குழுவின் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஆளணியின் சம்பளத்தில் திருத்தம் மேற்கொள்ளல் - 2016 எனும் தலைப்பிலான 2016.08.18 ஆம் திகதிய 04/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையை கவனத்திற் கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவானது 2016.09.22 ஆம் திகதி கூடிய தனது 949 ஆவது கூட்டத் தொடரின்போது 2016.01.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பல்கலைக்கழக முறைமையில் திருத்தப்பட்ட சம்பள அமைப்பை நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானித்தது. உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரால் அனுப்பப்பட்ட கடிதம் மற்றும் 04/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை முறையே இணைப்பு I மற்றும் II ஆக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

03. புதிய சம்பள அமைப்பில் பல்கலைக்கழக ஆளணிக்குச் செலுத்தப்படும் கீழ் குறிப்பிடப்படும் படிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன;

i) முறையே 2011.01.17 ஆம் திகதிய இலக்கம் 943 , 2012.01.04 ஆம் திகதிய இலக்கம் 973 மற்றும் 2013.01.04 ஆம் திகதிய இலக்கம் 999 கொண்ட ஆணைக் குழுச் சுற்றறிக்கைகள் ஊடாக அமுல்படுத்தப்பட்ட முறையே 43, 46 மற்றும் 48 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகளின் பிரகாரம் செலுத்தப்படும் விசேட படி,

ii) 2014.11.13 ஆம் திகதிய இலக்கம்: 12/2014 மற்றும் 2015.02.12 ஆம் திகதிய இலக்கம்: 03/2015 கொண்ட ஆணைக் குழுச் சுற்றறிக்கைகள் ஊடாக அமுல்படுத்தப்பட்ட 24/2014, 24/2014 ( i) மற்றும் 05/2015 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைகளுக்கமைய செலுத்தப்படும் ரூபா 10,000/- இடைக்காலக் கொடுப்பனவு,

04. முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின் **அட்டவணை I** இல் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தப்பட்ட சம்பள அளவுத் திட்டங்கள் 2016.01.01 ஆம் திகதி முதல் 05 கட்டங்களில் **அட்டவணை II** குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

05. **அட்டவணை I** இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான சம்பள அளவுத் திட்டங்களின் கீழ் ஒவ்வொரு பதவிகளினதும் சம்பளக் குறியீடுகளுக்கமைய தயாரிக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டங்கள் இணைப்பு III இல் குறிப்பிடப்பட்டுள்ளது. 2012.06.26 மற்றும் 2006.08.11 ஆம் திகதியன்று பணியாற்றியுள்ள தற்போது பதவிகளை வகிப்பவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டங்கள் திருத்தப்பட்ட சம்பள அளவுத் திட்டங்களுக்குள் உள்ளடக்கப்படுவதனால் தற்போது பதவி வகிப்பவர்களின் திருத்தப்பட்ட சம்பள அளவுத் திட்டங்கள் விசேடமாகக் குறிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும் கவனத்திற்கொள்ளப்படும் பதவியின் பொதுவான சம்பள அளவுத் திட்டத்திலிருந்து விசேடமான தனிப்பட்ட பிறிதொரு சம்பள அளவுத் திட்டத்தைக் கொண்டிருக்கும் [உ-ம் : U-MN 3(II) மற்றும் U-MN 3(I)] ஊழியர் ஒருவரின் திருத்தப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் குறிப்பிட்ட சம்பள மாற்றல் அட்டவணை / அட்டவணைகளை பொருத்தமான வகையில் பின்பற்றி திருத்தப்பட்ட தற்போதைய சம்பள அளவை கணக்கிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

06. எவ்வாறாயினும், முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 10 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நியமனம் / பதவி உயர்வுக் கடிதங்களை வழங்கும் சகல சந்தர்ப்பங்களிலும் அதில் இணைப்பு III இல் குறிப்பிடப்பட்டுள்ள 2020 ஆம் ஆண்டிற்குரிய சம்பள அளவுத் திட்டத்தைக் குறிப்பிடல் வேண்டும். அத்துடன், முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை II இன் பிரகாரமே சம்பளம் செலுத்தப்படும் என்பதனைக் குறிப்பிடல் வேண்டும்.

07.2016.01.01 திகதி முதல் 2016.11.30 வரையிலான காலப் பகுதிக்குள் செலுத்திய விசேட கொடுப்பனவு மற்றும் இடைக் காலக் கொடுப்பனவின் அடிப்படையில் பல்கலைக்கழக சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஓய்வூதிய நியதியத்திற்காக பங்களிப்புத் தொகையை அறவிடல் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் உரிய காலத்தில் அறிவிக்கப்படும்.

08. 04/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் சில விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து தெளிவுபடுத்தல்கள் வினவப்பட்டுள்ளதனால் அந்தத் திணைக்களத்திடமிருந்து பதில் கிடைக்கும் வரை இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உயர் கல்வி நிறுவகங்களுக்கு பணிப்புரை விடுக்கப்படுகின்றது.

09. தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம் : பேராசிரியர் மொஹான் த சில்வா**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவிநிதிப் பொறுப்பாளர்கள்/ உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/9/86 (16th Volume)